செய்தி வெளியீடு எண். 16 நாள்: 08.01.2018

**இந்திய குழந்தைகள் திரைப்பட சங்கம் மற்றும் மாவட்டம் நிர்வாகம் சார்பாக குழந்தைகளுக்கான சிறப்பு திரைப்பட விழாவினை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார்**

திருவள்ளூர் மீரா திரையரங்கத்தில் இந்திய குழந்தைகள் திரைப்பட சங்கம் மற்றும் மாவட்டம் நிர்வாகம் சார்பாக குழந்தைகளுக்கான சிறப்பு திரைப்பட விழாவினை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் இன்று (08.01.2018) குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து திரைப்படத்தை மாணவர்களுடன் சேர்ந்து கண்டு மகிழ்ந்தார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் கூறியதாவது :

திருவள்ளூர் மாவட்டத்தில் இன்று (08.01.2018) முதல் 12.01.2018 வரை 5 நாட்களுக்கு குழந்தைகள் திரைப்பட விழா மாவட்டத்தில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட கியூப் தொழில் நுட்பத்துடன் பொருந்திய 26 திரையரங்குகளில் குழந்தைகள் திரைப்படமானது திரையிடப்படுகிறது. திரையரங்குகளில் மல்லி, எங்களாலும் முடியும், துபாஷி, முதலை உள்ளிட்ட சர்வதேச மற்றும் தேசிய விருதுகளை வென்ற குழந்தைகள் திரைப்படமானது பள்ளி மாணவர்களுக்கு திரையிட்டு காட்டப்படவுள்ளது. 26 திரையரங்குகளில் ஒரு நாளைக்கு 1 காட்சி வீதம் 5 நாட்களுக்கு 130 காட்சிகள் திரையிட்டு காட்டப்படவுள்ளது. இத்திரைப்படங்கள் பள்ளி மாணவர்களிடம் நல்ல பல கருத்துக்களை தெரிவிக்கும் விதமாக அமைந்துள்ளது. இத்திரைப்படங்கள் அனைத்தும் மாணவர்களுக்கு இலவசமாக திரையிட்டு காட்டப்படுகிறது. இதனை மாவட்டத்தில் உள்ள அனைத்து தேர்ந்தெடுக்கப்பட்ட திரையரங்குகளில் பள்ளி மாணவர்களுக்கு திரையிட்டு காட்டப்படுவதற்கு சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு தகுந்த அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் முனைவர்.த.இராஜேந்திரன், மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திருமதி.இரா.இளவரசி, திருவள்ளூர் வருவாய் கோட்டாட்சியர் திருமதி.கெ.ரா.திவ்யஸ்ரீ, இந்திய குழந்தைகள் திரைப்படச் சங்க உதவி விநியோக அலுவலர் திருமதி.அகிலா, திருவள்ளூர் வட்டாட்சியர் திரு.தமிழ்செல்வன், அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் திரளான மாணவர்கள் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,திருவள்ளூர்.**